# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## SC No. 232/2023

## PW: 1

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.ராஜ்குமார் | Occupation: | விவசாயம் |
| Father's Name : | திரு. வீரையன் | Religion : | இந்து |
| Village : | தேனாம்படுகை | Age : | 36 |
| Taluk : | கும்பகோணம் | | |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 14th day of August 2024.

Signature of Witness.

(Accused present. Additional Public Prosecutor Present. Defence counsel present. )

முதல் விசாரணை :

நான் தேனாம்படுகையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என் அம்மா பெயர் மகாராணி. தம்பி பெயர் சசிக்குமார். என் பாட்டி 2021-ல் இறந்தார். அப்போது எங்கள் குடும்பத்திற்கும் எங்கள் உறவினராக ஜெயக்குமார் குடும்பத்திற்கும் இடையே மனஸ்தாபம் ஏற்பட்டது. என் பாட்டி இறப்பின்போது தண்ணீர் தூக்குவதற்கு அவர்களை கூப்பிடவில்லை என்று மனஸ்தாபம் ஏற்பட்டது. அதனால் நாங்கள் அவர்கள் வீட்டு விசேஷத்திற்கு செல்வது

கிடையாது. 17.09.2021 அன்று தேனாம்படுகையில் உள்ள பாய்கடையில் மளிகை பொருட்கள் வாங்குவதற்காக நான் இரவு 8.30 மணிக்கு வாங்கிவிட்டு நின்றுக் கொண்டிருந்தேன். ஜெயக்குமார் மகன் அஜீத்தும் மருமகன் அய்யப்பனும் டிவிஎஸ் ஸ்போர்ட்ஸ் பைக்கில் வந்தார்கள். என்னை பார்த்ததும் நன்றாக ஹாரன் அடித்தார்கள். ஏன் இப்படி பண்றீங்க என்று கேட்டேன். எங்கள் மூவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. சமாதானம் ஆகி நாங்கள் சென்று விட்டோம். நான் என் வீட்டிற்கு சென்று விட்டேன். என் வீட்டில் அவர்கள் செய்தது குறித்து கூறினேன். என் வீட்டில் அவர்கள் பெற்றோரிடம் சென்று கூறிவிட்டு வாருங்கள் என்று கூறினார்கள். எங்கள் வீட்டிலிருந்து அவர்கள் வீடு 50, 60 மீட்டர் தொலைவில் உள்ள காலனி தெருவில் உள்ளது. அவர்கள் வீட்டிற்கு நான் சென்றேன்.

2) ஜெயக்குமார், அவரது மகன் அஜீத், அவரது மருமகன் அய்யப்பன், அவரது மனைவி ஆகியோர் ஜெயக்குமார் வீட்டில் இருந்தார்கள். நான் அவர்களிடம் கூப்பிட்டு சொன்னேன். தேவையில்லாமல் என்னிடம் பிரச்சனை செய்வதாக கூறினேன். அதற்கு அஜீத் அப்படிதாண்டா செய்வேன் புண்டை மவனே என்று கூறினார். ஜெயக்குமார் அவனை வெட்டி புதைங்கடா என்று கூறினார். அருகில் இருந்த அருவாளை எடுத்து அஜீத் இத்தோடு செத்து தொலைடா தேவடியா மவனே என்று கூறி பின் மண்டையில் வெட்டி விட்டார். ஜெயக்குமார் பின்னால் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து வெட்டினார். நான் இரண்டு

கைகளாலும் தடுத்தேன். எனது இரண்டு கைகளிலும் வெட்டு பட்டது. என்னால் வலது கை விரல்களை மடக்க முடியாது, இடது கையில் சுண்டு விரலை மடக்க முடியாது. (சாட்சியால் வலது கை விரல்களை மடக்க முடியவில்லை) ஜெயக்குமாரின் மருகன் சாவுடா என்று சொல்லி எனது முதுகில் உதைத்து தள்ளினார். ஜெயக்குமாரின் மனைவி அவனை விட்ராதீங்கடா அடிச்சி சாவடிச்சிடுங்கடா என்று கூறினார். என்னை அனைவரும் திருப்பி தாக்கினார்கள். ஜெயக்குமார் என்னை வலது பக்கம் பக்கவாட்டில் நெற்றியில் வெட்டி விட்டார். (சாட்சிக்கு வலது பக்க பக்கவாட்டு நெற்றியில் காயங்கள் உள்ளது). நான் மயங்கி கீழே விழுந்து விட்டேன்.

3) எனது தம்பி சசிக்குமார் மாமா மகன் ஜெய்சிங் 108 ஆம்புலன்சை வரவழைத்து கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். இங்கு பார்க்க முடியாது என்று கூறியதால் சீனிவாசநல்லூர் AVR மருத்துவமனையில் என்னை சிகிச்சைக்காக அனுமதித்தார்கள். 5 நாட்கள் மருத்துவமனையில் நான் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். அதன்பிறகு வீட்டிலிருந்தே நான் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். என்னால் சாப்பாடு கூட சாப்பிட முடியாது. என் அம்மா தான் எனக்கு 5 மாதங்களாக சாப்பாடு ஊட்டி விடுகிறார். வழக்கில் சம்மந்தப்பட்டவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகள் தான். இது சம்மந்தமாக நான் காவல் துறையில் புகார் கொடுத்தேன். எனக்கு கை முடியாமல் இருந்ததால் நான் அதில் கையொப்பம் செய்யவில்லை, என் தம்பி தான் கையொப்பம் செய்துள்ளார். புகார்

வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் அருவாள்கள் தான் என்னை வெட்ட பயன்படுத்திய அருவாள்கள் ஆகும். பெரிய அருவாளால் அஜீத் வெட்டினார். சின்ன அருவாளால் ஜெயக்குமார் வெட்டினார். பெரிய அருவாள் அ.சா.பொ.1 ஆகும். சின்ன அருவாள் அ.சா.பொ.2 ஆகும். சம்பவம் நடந்த போது நான் அணிந்திருந்த கைலி தான் என்னிடம் காண்பிக்கப்படுவது ஆகும். அந்த கைலி அ.சா.பொ.3 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் சட்டை நான் சம்பவத்தின்போது அணிந்திருந்ததாகும். அதில் இரத்த கறை படிந்தது. அந்த இரத்த கறை படிந்த சட்டை அ.சா.பொ.4 ஆகும்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :

வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

D SHANMUGA PRIYA

Digitally signed by D SHANMUGA PRIYA
Date: 2024.08.14 17:03:09 +0530

*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*